படைவீரனாகப் பணியாற்றினார். மன்னன் மார்த்தாண்ட வர்மாவின் நன்மதிப்பைப் பெற்று திருவிதாங்கூர் அரண்மனையில் பணியில் நியமிக்கப்பட்டார் நீலகண்ட பிள்ளை.

## டிலனாய் - நீலகண்டன் நட்பு:

திருவிதாங்கூர் மன்னருக்கும் டச்சுக்காரர்களுக்கும் 1741-இல் நடந்த குளச்சல் போரில் மார்த்தாண்டவர்மாவின் படை வெற்றி பெற்றது. போர்க் கைதிகளாக டச்சுப் படையைச் சேர்ந்த 24 பேர் பிடிபட்டார்கள். அவர்களுள் ஒருவர்தான் பெனதிக்து டிலனாய். இவர் ஒரு நல்ல கத்தோலிக்கர். மார்த்தாண்ட வர்மா அவரது திறமைகளையும், நற்பண்புகளையும் அறிந்து அவரைத் தமது படையில் சேர்த்துக் கொண்டார். மேலும், மண்கோட்டையாக இருந்த உதயகிரி கோட்டையைக் கற்கோட்டையாக மாற்றும் பொறுப்பும் டிலனாயிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணியில் தொழிலாளருக்கு வாரா வாரம் ஊதியம் வழங்கும் பணி நீலகண்டனுக்குத் தரப்பட்டது. எனவே டிலனாய் - நீலகண்டன் இருவருக்கிடையே நல்லுறவு ஏற்பட்டது. இருவரும் நண்பர்கள் ஆயினர்.

## திருமணம்:

எல்லாருடைய நல்மதிப்பையும் பாராட்டையும் பெற்றிருந்த நீலகண்டன், மேய்க்கோடு ஊரைச் சேர்ந்த பார்க்கவி அம்மாள் என்பவரை மணம் முடித்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

## துன்பங்கள் வழி கத்தோலிக்க நம்பிக்கை:

நீலகண்டனின் வாழ்வில் துன்பங்கள் வந்தன. எவ்வாறெனில், பயிர்கள் தொடர்ந்து கரிந்து போயின; நல்ல கால்நடைகள் மடிந்து போயின. தம் நண்பன் நீலகண்டனின் கவலையைக் கேட்டுத் தெரிந்து கொண்டார் டிலனாய். நீலகண்டனுக்கு ஆறுதலாகவும், துன்பத்தின் பொருள் விளங்கும்படியும் அவருக்கு பழைய ஏற்பாட்டின் யோபு வரலாற்றைச் சொன்னார் டிலனாய். இயேசுவின் பாடுகளையும் விவரித்தார். விவிலியத்தின் இந்த இறைவார்த்தையால் தொடப்பட்டார் நீலகண்டன். தன் துன்பங்களின் பொருளையும் வாழ்வின் அர்த்தத்தையும் கண்டு கொண்டார். எனவே அவர் இயேசுவின் சீடராக மாற விரும்பினார்.

## திருமுழுக்கு:

கிறித்தவத்தில் ஆர்வம் காட்டிய தம் நண்பரை வடக்கன்குளத்திலிருந்த சேசுசபை மறைப்பணி மையத்திற்கு அனுப்பினார் டிலனாய். அப்பணி மையத்தின் பொறுப்பாளராக இருந்தவர்